## ஜாதி, மதங்கள் இல்லை

**சாதியாவது ஏதடா சலம் திரண்ட நீரலோ**

**பூதவாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ**

**காதில்வாளி காரைகம்பி பாடகம் ஒன்றலோ**

**சாதி பேதம் ஓதுகின்ற தன்மைஎன்ன தன்மையே!!!**

**இதன் விளக்கம் :**

✠ ஆண், பெண் என்பது தானே சாதி. இதில் பல சாதிகள் ஏதப்பா? இவ்வுலகம் முழுமையும் நீர்தான் நிரம்பியுள்ளது. அதுபோலவே உயிரும் நீராகத்தான் உள்ளது. உடம்பில் பத்தாம் வாசலாகவும், பஞ்சபூதமாகவும், பஞ்சாட்சரமாகவும் உள்ள பொருள் ஒன்றே. அதுபோல நகைகளில், காதில் அணியும் தோடாகவும், மூக்கில் அணியும் மூக்குத்தியாகவும், கைகளில் அணியும் வளையல் போன்ற பல வகையாகவும் இருப்பது தங்கம். இவை அனைத்திற்கும் பெயர் தங்கம் ஒன்றே ஆகும். இதை அறியாமல் எல்லா உயிர்களும் இறைவனிடம் இருந்து வந்ததை உணராமல் சாதி, பேதம், பேசுகின்ற உங்களின் தன்மைகளை என்னவென்று கூறுவேன் என்று கூறுகிறார்கள்.

## பாவ - புண்ணியங்கள்

**மண்ணிலே பிறக்கவும் வழக்காலாது உரைக்கவும்**

**எண்ணிலாத கோடி தேவர் என்னது உன்னது என்னவும்,**

**கண்ணிலே மணி இருக்கக் கண் மறைந்தவாறு போல்**

**எண்ணில் கோடி தேவரும் இதின் கனார் விழிப்பதே!**

**<u>இதன் விளக்கம் :</u>**

இருவினை பாவ புண்ணியத்தால்தான் மண்ணில் பிறக்கின்றோம். கடவுள் உண்டென்றும், இல்லையென்றும் வழக்குகள் பேசுகின்றோம். எண்ணில்லாத கோடி தேவர்களையும் என்னுடையது, உன்னுடையது என்றும் உரிமை கொண்டாடுகிறோம். அதனால் இறைவனை அறிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. அவர் உனக்குள்ளேயே அதுவாக இருப்பதை உணருங்கள். கண்களில் இருக்கும் கண் மணியால் எல்லாம் காணப்பட்டாலும் அதனை அக்கண்ணே மறப்பதுபோல் தனக்குள் இருக்கும் ஆன்மாவை காணமுடியாது. மையை மறக்கின்றது. இதனை தியான வலிமையால் அக்கண் திறந்து பார்த்தால் எல்லா தெய்வங்களும் இதன் கண் இருப்பதை அறிந்து கொள்ளுங்கள்.